நயம்பாராட்டுதல்

தொடை (8) எட்டு

1. மோனை - முதலாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது
2. எதுகை - இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது
3. முரண் - சொல்லாலும் பொருளாலும் மாறுதல் படத் தொடுப்பது
4. இயைபு - ஈற்றெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது
5. அளபெடை - உயிரளபெடையாயினும் ஒற்றளபெடையாயினும் ஒன்றிவரத் தொடுப்பது
6. அந்தாதி - முன்நின்ற பாட்டின் இறுதி எழுத்தாயினும் அசையாயினும் சீராயினும் பின்வரும் பாட்டின் முதலாகப் பாடுவது.
7. இரட்டைத்தொடை - ஓரடி முழுவதும் ஒரு சொல்லே வரத் தொடுப்பது.
8. செந்தொடை - மோனை முதலிய எந்தத் தொடையும் தொடை விகற்பமும் போலன்றி வேறுபட வருவது செந்தொடையாகும்

தொடை விகற்பம் (35)

1. இணை - 1,2
2. பொழிப்பு - 1,3
3. ஒரூஉ - 1,4
4. கூழை - 1,2,3
5. மேற்கதுவாய் - 1,3,4
6. கீழ்க்கதுவாய் - 1,2,4
7. முற்று - 1,2,3,4

கீழ்காணும் பாடலின் திரண்ட கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களை எடுத்தெழுதுக.

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே.

- இராமலிங்க அடிகள்**

திரண்ட கருத்து:

இப்பாடல் இராமலிங்க அடிகள் இயற்றிய திருவருட்பாவில் ஆறாம் திருமுறையில் 'சுத்த சன்மார்க்க வேண்டுகோள்' என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

அப்பா, நான் வேண்டுகின்றவற்றைக் கேட்டு, எனக்கு அருள் புரிவாயாக. பெறுதற்கரிய உயிர்கள் அனைத்திற்கும் அன்பு காட்டுதல் வேண்டும். என் அருமையான

தந்தையாகிய உன் புகழை எங்கெங்கும் எடுத்துச் சொல்ல வேண்டும். சொல்லுதற்கியலாத உயர்ந்த இடத்தில் இருக்கின்ற உயிர் இரக்கப் பெருவழி விளங்குவதற்கு உரிய அறிவொளியைக் கொண்டு செல்ல வேண்டும்; என் அருமைத் தலைவா! உன்னைப் பிரியாமல் நான் இருக்கவும் அருள் செய்ய வேண்டும்.

குறிப்பு நயம்:

அருள்புரிதல் இறைவன் செயல். அன்பு செய்தல், புகழை இயம்பிடுதல், அருட்சோதி செலுத்துதல், பிரியாதிருத்தல் ஆகியன உயிர்களுக்கான செயல்கள். இவற்றை இப்பாடலில் குறிப்பாக உணர்த்துகிறார்.

அணி நயம்:

இப்பாடலில் இறைவனை வழிபடக்கூடிய தன்மைகளை இயல்பாகக் கூறியுள்ளமையால் இயல்பு நவிற்சி அணி பயின்றுள்ளது.

தொடை நயம்:

“தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும்” என்ற தொடருக்கு ஏற்பத் தொடைநயங்கள் பல பயின்று வந்துள்ளன.

எதுகை நயம்:

அடிதோறும் இரண்டாவது எழுத்து ஒன்றிவருவது எதுகை ஆகும். (எ.டு) அப்பா, எப்பாரும், செப்பாத, தப்பேது.

மோனை நயம்:

“குயவனின் கைவண்ணம் பானையிலே
புலவனின் கைவண்ணம் மோனையிலே”

பாடலில் அடிதோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை. ஓரடியில் முதல் மூன்று சீர்களிலும் வருவது கூழை மோனை.

எப்பாரும் எப்பதமும் எங்கணும் – கூழை மோனை

இயைபு நயம்:

இப்பாடலில் ‘வேண்டும் வேண்டும்’ என்னும் இயைபுச் சொற்கள் வந்து ஓசையின்பம் பயக்கின்றன.

பாலைவனம் சோலைவன மாக வேண்டும்;
  பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்;
சாலைகளிற் பலதொழிலும் பெருக வேண்டும்;
  சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்;
சீலை உடை கதருடையாய்த் திகழ வேண்டும்;
  தேசபக்தி செழித்தோங்கி திகழ வேண்டும்;
வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும்;
  வெற்றியின்மேல் வெற்றி எமக்கெய்த வேண்டும்;

- கவிமணி

திரண்ட கருத்து:

நம் தமிழ்நாடு எவ்வாறு செழித்தோங்க வேண்டும் என்ற கவிமணியின் கற்பனை இங்கு பாடலாக அமைந்துள்ளது. பாலைவனங்கள் எல்லாம் மரங்கள் நிறைந்த சோலையாக மாற வேண்டும். அம்மரங்களில் பசுமையான கிளிகள் அமர்ந்து பாட

வேண்டும் எனக் கூறினார். நாட்டில் பல தொழிற்சாலைகள் பெருக வேண்டுமெனவும், மக்கள் கதர் ஆடை அணிய வேண்டுமெனவும், மேடைகளில் தமிழ் முழங்கப்பட வேண்டுமெனவும் கூறியுள்ளார். மக்களிடையே நாட்டுப்பற்று செழித்தோங்கவும், நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்து வெற்றி கிட்ட வேண்டுமெனவும் கூறியுள்ளார்.

பொருள் நயம்:

நாட்டில் வறட்சி நீங்கி வளமை செழித்தோங்கவும், தொழிற்சாலைகள் பெருகவும், மேடைகளில் தமிழ் முழங்கவும், மக்கள் கதர் ஆடை அணியவும், வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியவும் வேண்டுமென்று கவிமணி கூறியுள்ளார்.

தொடை நயம்:

எதுகைத்தொடை:

அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவர் தொடுப்பது எதுகையாகும்.
பாலைவனம், சாலைவனம், சீலை, வேலை

இயைபுத்தொடை:

அடிதோறும் ‘வேண்டும்’ என்ற சொல் கொண்டு முடிந்துள்ளதால் இயைபுத் தொடை ஆகும்.

சந்தநயம்:

இப்பாடலானது அழகிய சந்த நயத்துடன் காணப்படுகிறது.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
        தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
        தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
        சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
        அதை வணக்கம் செய்தல் வேண்டும்.

- பாரதியார்.

திரண்ட கருத்து:

பிற நாடுகளைச் சேர்ந்த சிறந்த அறிஞர்களின் படைப்பைத் தமிழ்மொழியில் மொழி பெயர்க்க வேண்டும். என்றும் அழியாத புகழுடைய நூல்கள் பலவற்றைத் தமிழில் புதிதாக இயற்ற வேண்டும். நமக்கு நாமே நம்முடைய பழைய புராணங்களைப் பேசிக் காலத்தை வீணே கழிப்பதில் எந்தப் பெருமையும் கிடையாது.

திறமான நம்முடைய படைப்புகளைப், படித்து அதற்கு வெளிநாட்டார் மரியாதை செய்ய வேண்டும்.

குறிப்பு நயம்:

பிற நாடுகளில் உள்ள சிறந்த நூல்களைப் படித்துத் தமிழில் மொழிபெயர்த்துத் தமிழை வளர்க்க வேண்டும் எனக் குறிப்பால் உணர்த்துகிறார்.

அணிநயம்:

இப்பாடலில் இயல்பு நவிற்சி அணி பயின்று வந்துள்ளது.

தொடை நயம்:

"தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும்" என்ற தொடருக்கு ஏற்பத் தொடைநயங்கள் அமைந்துள்ளன.

எதுகைத்தொடை:

இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை எனப்படும்.

பிறநாட்டு, இறவாத, மறைவாக, திறமான

மோனைத்தொடை:

ஓர் அடியில் சீர்கள் தோறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது சீர்மோனை ஆகும்.

பிறநாட்டு பெயர்த்தல்
இறவாத இயற்றல்
மறைவாக மகிமை

இயைபுத்தொடை:

அடிதோறும் இறுதிச் சீர் ஒன்றி வருவது இயைபுத் தொடை ஆகும்.

இப்பாடலில் 'வேண்டும்' 'வேண்டும்' என்னும் சொல் இறுதியில் வந்து இயைபுத் தொடை பயன்றுள்ளது.

மனிதரெலாம் அன்புநெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப்போல விரிவடைந்து
தனிமனிதத் தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர் வதற்கும்
இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை
புனிதமுற்று மக்கள் புதுவாழ்வு வேண்டில்
புத்தகசா லை வேண்டும் நாட்டில் யாண்டும்

- பாரதிதாசன்***

திரண்ட கருத்து அல்லது திரண்ட பொருள்:

இவ்வுலகில் வாழும் மனிதரெல்லாம் அன்பு வழியைக் காண்பதற்கும், அவர்களின் மனநிலையானது வானத்தைப் போல விரிவடைந்து விளங்குவதற்கும், யான் எனது என்று எண்ணும் சுயநல இருளிலிருந்து விலகி எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓரினம் என்று உணர்வைத் தருவதற்கும் பயன்படுவது புத்தகச்சாலைகள் ஆகும். இனிதினிதான உயர்ந்த எண்ணங்களை விதைப்பது புத்தகச்சாலைகள் ஆகும். இவ்வுலக மக்கள் அனைவரும் புனிதமாக வாழக்கூடிய புதுவாழ்வை வாழ விரும்பினால் இந்நாட்டில் எங்கும் புத்தகச்சாலைகள் நிறுவப்படல் வேண்டும்.

மையப்பொருள்:

அறிவுப்பசி போக்கும் புத்தகச்சாலை பற்றி இப்பாடல் தெளிவாக எடுத்துக்கூறுகிறது.

மோனை நயம்:

மோனையில்லாத பாடல் சேனையில்லாத அரசனுக்குச் சமம், செய்யுளில் முதலெழுத்து ஒன்றி வருவது மோனை நயமாகும். இச்செய்யுளில்
மனிதரெல்லாம்
மனோபாவம்
இனிதினிதாய்
இலகுவது
புனிமுற்று
புத்தகசாலை போன்ற தொடர்களில் அடிமோனை பயின்று பாடலுக்கு அழகு தருகிறது.

எதுகை நயம்:

ஏது கை கொடுக்காவிட்டாலும் எதுகை கை கொடுக்கும் என்பதற்கேற்பச் செய்யுளின் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை நயமாகும். இப்பாடலில்
மனிதரெல்லாம்
தனிமனிதத்
இனிதினிதாய்
புனிதமுற்றுப் போன்ற அடிகளில் இரண்டாம் எழுத்து ஒன்றி வந்து எதுகை நயம் சிறப்பாக அமைந்துள்ளது.

அணி நயம்:

இப்பாடலில் மனிதர்களின் மனநிலையை விளக்க வந்த புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வானத்தைப் போல மனம் விரிவடைந்து காணப்பட வேண்டும் என்று கூறுகிறார்.

சொல் நயம்:

இப்பாடலில் புத்தகச்சாலை என்ற புதிய சொற்றொடரைக் கவிஞர் கையாண்டுள்ளார். சோலை வனத்தில் மரங்கள் செழிப்புற்றுப் பசுமையுடன் அழகு தருவது போலச் சாலைகளில் எல்லாம் புத்தகச்சாலை அமைத்து அழகு சேர்க்க வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்.

முடிவுரை:

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் அறிவார்ந்த எண்ணம் இப்பாடலில் வெளிப்படுவதை நாம் காண்கிறோம்.

உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர்தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்
தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்
இலவசநூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்
எங்கள்தமிழ் உயர்வென்று நாம்சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம்; குறைகளைந்தோ மில்லை
தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்.

- பாவேந்தர் பாரதிதாசன்**

திரண்ட கருத்து:

உலகியல் நடைமுறையில் உள்ள எல்லாவற்றுக்கும் ஒவ்வொரு துறைக்கும், தமிழில் நூல்களை எல்லோருக்கும் புரியும் வகையில் இயற்றுதல் வேண்டும். தமிழின் பெருமையினை மதங்களோடு சேர்க்கக்கூடாது. எல்லா இடங்களிலும் இலவச நூல் நிலையங்கள் ஏற்பட வேண்டும். தமிழின் பெருமையைப் பேசிப்பேசிக் காலம் கழிக்கக்கூடாது. தமிழில் உள்ள குறைபாடுகளைக் களைய முனைய வேண்டும்.

மையப்பொருள்:

தமிழ் மொழி எவ்வாறு வளர்ச்சியடைய வேண்டும் என்பதனை இப்பாடல் நன்கு விளக்குகின்றது.

மோனை நயம்:

பாடலில் அடிதோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை.

உலகியலின் துறைதோறும்
ஊரறியும் தமிழில்
தமிழொளியை
உயர்வென்று
தலைமுறைகள்

ஓர் அடியில் சீர்கள் தோறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது சீர்மோனை ஆகும். இங்கு கூழைமோனை வந்துள்ளது.

தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்.

எதுகை நயம்:

செய்யுளில் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை நயமாகும். இப்பாடலில்

உலகியலின்
சலசலென
இலவசநூற்
துறைதோறும்
குறைகளை

இயைபுத்தொடை:

அடிதோறும் இறுதிச் சீர் ஒன்றி வருவது இயைபுத் தொடை ஆகும்.

இப்பாடலில் ‘வேண்டும்’ ‘வேண்டும்’ என்னும் சொல் இறுதியில் வந்து இயைபுத் தொடை பயன்றுள்ளது.

(அல்லது)

பாடலின் திரண்ட கருத்தை எழுதி ஐந்து நயங்களை எழுதுக.

மனிதரெல்லாம் அன்புநெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து
தனிமனிதத் தத்துவமாம் இருளைப் போக்கி
சகமக்கள் ஒன்றென்ப தணர்வதற்கும்
இனிதினிதாய் எழுந்த உயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர் தரு சுவடிச்சாலை
புனிதமென்று மக்கள் புது வாழ்வு வேண்டிவ்
புத்தக சாலை வேண்டும் நாட்டில் யாண்டும்

புத்தக சாலை

1. **திரண்டகருத்து:**

மனிதர்கள் அன்புடன் வாழும் மனநிலை பெற வேண்டும். தனிமனித அறியாமை இருளை நீக்கவும் அனைவரும் சமம் என்னும் உயர்ந்த நோக்கம் வேண்டும் சிந்தனையைத் தூண்டும் பெரியோர்கள் கூறிய சிந்தனைகள் அடங்கிய புத்தகச் சாலைகள் நாடெங்கும் பெருக வேண்டும்.

மையக்கருத்து:

மனிதர் எல்லாம் அன்பு நெறியோடு, வானைப் போன்ற பரந்த மனமும் தனி மனித சுயநலம் போக்கி அனைத்து மக்களும் ஒன்று என்று உணர்ந்து நன்னெறி ஓங்க புலவர்கள்இயற்றிய புத்தகச் சாலைகள் நாட்டில் அமைதல் வேண்டும்.

அணிநயம்:

வானைப் போல விரிவடைந்து
போல எனும் உவம உருபு அழகு செய்வதால் – உவமையணி பயின்றுள்ளது.

எதுகை நயம்:

ம<u>னித</u>ரெலாம்
<u>தனி</u> மனித
இ<u>னி</u>தினிதாய்
பு<u>னித</u> முற்று

இரண்டாம் எழுத்து ஒன்றி வந்து எதுகைச் சுவை தந்துள்ளது.

மோனை நயம்:

மனிதரெல்லாம்
மனோபாவம்
இனிதினிதாய்
இலகுவது

முதலெழுத்து ஒன்றி வந்து மோனைச்சுவை பெற்றுள்ளது.

சொல்நயம்:

''மனிதர்களின் மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து'' அன்பு நெறி, மனோபாவம், தனிமனித தத்துவம்–இன்பம் பயக்கும் ஓசைநயம் மிக்க சொற்களை கவிஞர் கையாண்டுள்ளார்.

பொருள் நயம்:

''புனிதமுற்று மக்கள் புதுவாழ்வு வேண்டி புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்''.

மக்கள் புனிதமான புது வாழ்வு வாழ புத்தகசாலைகள் நாட்டில் அமைதல் வேண்டும் என்று பொருள்படுமாறு அமைந்துள்ளது. நயமாக நூலகம் அமைதல் வேண்டும் என்ற பொருள்படுமாறு கூறியுள்ளார் கவிஞர்.

2. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும் – **பாரதியார்**

தமிழை வளர்ப்போம்

திரண்ட கருத்து:

பிற நாட்டு நல்லறிஞர்களால் இயற்றப்பட்ட நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்திடல் வேண்டும். கால மாற்றங்களால் அழியாத புகழ்மிக்க புதுப்புது நூல்களைத் தமிழ் மொழியில் இயற்றுதல் வேண்டும். தமிழின் பழம்பெருமைகளை மறைவாக நமக்குள்ளே பேசிக் கொண்டிருப்பதில் ஒரு பெருமையும் இல்லை. புது நூல்கள் இயற்றி, வெளி நாட்டவரும் அதைப் போற்றி மதிக்கும் படி செய்தல் வேண்டும்.

எதுகை நயம்:

பி<u>ற</u>நாட்டு
ம<u>றை</u>வாக
இ<u>ற</u>வாத
தி<u>ற</u>மான

இரண்டாம் எழுத்து ஒன்றி வருவதால் எதுகை. நயம் பெற்று விளங்குகின்றது.

மோனை நயம்:

<u>பி</u>றநாட்டு – <u>**பெ**</u>யர்த்தல்
<u>ம</u>றைவாக – <u>ம</u>கிமை
இ<u>ற</u>வாத – **இ**யற்றல்

முதலெழுத்து ஒன்றி வருவதால் மோனை நயம் பெற்றுள்ளது.

அணி நயம்:

வேண்டும் எனும் சொல் பலமுறை வந்து ஒரே பொருளை உணர்த்துவதால் இது பின்வருநிலையணி ஆயிற்று.

சொல் நயம்:

இறவாத புகழ், பழங்கதைகள், திறமான புலமை முதலிய இன்பம் பயக்கும் ஓசைநயம் மிக்க சொற்களை கவிஞர் கையாண்டுள்ளார்.

பொருள் நயம்:

பல்துறை நூல்கள் தமிழில் படைத்தல் தமிழ் வளர்ச்சி பெறும் என்பதனை கவிஞர் நயமாக கூறியுள்ளார்.

இயைபு நயம்:

''வேண்டும் எனும் சொல் ஒவ்வோர் அடியிலும் இயைந்து வந்துள்ளது.

தட்டச்சு:

க.அருண்குமார் எம்.ஏ., எம்.பி.ஏ., பி.எட்., எம்.ஃபில்., என்.இ.டி.,
தமிழ் ஆசிரியர்.